தினமணி

**மரவள்ளிக் கிழங்கு பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வலியுறுத்தல்**

First Published : 23 Feb 2012 01:36:30 PM IST

கரூர், பிப். 22: உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளுக்கு, அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம், தோகைமலை வட்டார அளவிலான விவசாயிகள் விவசாயிகள் குறைதீர் கூட்டம் தோகைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) காதர்மொகைதீன் தலைமை வகித்தார்.

தோட்டக் கலை துறை உதவி இயக்குநர் சிந்தாமணி, அரசுக் கால்நடை மருத்துவர் தியாகராஜன், மின் வாரிய உதவிப் பொறியாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட உதவி செயற்பொறியாளர் முத்துக்கிருஷ்ணன், விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது தோகைமலைப் பகுதியில் விவசாயத்திற்கு இரவில் மும்முனை மின்சாரம் வழங்குவதில்லை.

அடிக்கடி ஏற்படும் மின் தடையால் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்சப்பட்டியிலுள்ள அரசு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வியாபாரிகள் ஒருங்கிணைந்து விவசாயிகள் கொண்டு போகும் விளைபொருளுக்கு உரிய விலை கொடுக்காமல் மிகக் குறைந்த விலைக்கே கேட்கின்றனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும், மைதா, ஜவ்வரிசி தயாரிக்கும் நிறுவனங்கள் மரவள்ளிக் கிழங்கை கொள்முதல் செய்கின்றன.

கடந்தாண்டு மரவள்ளிக் கிழங்குக்கு டன்னுக்கு ரூ. 9,000 விலை கிடைத்தது.

ஆனால், தற்போது டன்னுக்கு ரூ. 1,500 மட்டுமே கிடைக்கிறது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தமிழக அரசு இதில் தலையிட்டு மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேளாண் விளைபொருள் கண்காட்சி**
First Published : 23 Feb 2012 03:26:10 PM IST

வேலூர், பிப். 22: வேலூரில் வேளாண் விளைபொருள் கண்காட்சி புதன்கிழமை நடைபெற்றது. வேலூர் மாவட்ட உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உழவர் தினவிழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு ஆட்சியர் அஜய்யாதவ் தலைமை வகித்துப் பேசினார்.
வேளாண் விளை பொருள்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. சிறந்த உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கும், சிறந்த விளைபொருள் உற்பத்தியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. வேளாண்மை இணை இயக்குநர் கோ. தமிழ்ச்செல்வம், துணை இயக்குநர் சு. ராமசாமி, வி.எல்லப்பன், தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.ஜெ. குணசேகரன், விரிஞ்சிபுரம் வேளாண் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சி. சிவமுருகன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் பி. ராஜ்குமார், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் கெ்ப். திலகவதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஆட்சியர் ஆய்வு**
First Published : 23 Feb 2012 01:17:07 PM IST

ஸ்ரீவில்லிபுத்தூர், பிப். 22: ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள வத்திராயிருப்பு, கான்சாபுரம் ஆகிய நேரடி கொள்முதல் நிலையங்களையும், ஸ்ரீவில்லிபுத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் கான்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் ஆகியவற்றையும் மாவட்ட ஆட்சியர் மு.பாலாஜி புதன்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:
விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வத்திராயிருப்பு, கான்சாபுரம், காரியாபட்டி, நொச்சிகுளம் மற்றும் உலக்குடி ஆகிய இடங்களிலும், கூட்டுறவு துறையின் சார்பில் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும், மம்சாபுரம், சேத்தூர், நாலூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
நரிக்குடி, வல்லம்பட்டி மற்றும் நென்மேனி ஆகிய இடங்களில் விரைவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த பயிர் பருவ ஆண்டு (அக்டோபர் 2011

முதல் செப்டம்பர் 2012 வரை) நமது மாவட்டத்தில் அரசின் நேரடி நெல் கொள்முதல் குறியீடு 9 ஆயிரம் டன் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை விவசாயிகளிடமிருந்து நேரடியாக 3 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் மட்டுமே நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும். வியாபாரிகளிடம் நெல் கொள்முதல் செய்யக் கூடாது.

அரசு நிர்ணயித்துள்ள சரியான விலையை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். நெல் கொண்டு வருபவர்கள் விவசாயிகள்தான் என்று உறுதி செய்வதற்கு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நெல் கொண்டு வரும் விவசாயிகளுக்கு பாரபட்சமின்றி வரிசைப்படி எடை மேடை தராசு மூலம் எடை போட வேண்டும்.

நெல்லின் ஈரப்பதம் அரசு தெரிவித்துள்ளபடி இருக்கிறதா என்பதை ஈரப்பதம் கண்டறியும் கருவியின் மூலம் உறுதி செய்தபின் நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.

நெல்லுக்குரிய விலையை உடனடியாக விவசாயிகளுக்குத் தாமதமின்றி பட்டுவாடா செய்ய வேண்டும். விவசாயிகளிடம் அரசு நிர்ணயித்துள்ள இறக்குக் கூலியை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் தெரிவித்தார்.

முன்னதாக, வரும் வழியில் கான்சாபுரம் வயல்வெளிகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்த விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, நலத் திட்ட உதவிகள் சிரமமின்றி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆய்வின்போது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் உடன் சென்றிருந்தனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 72.45 அடி**

First Published : 23 Feb 2012 12:12:18 PM IST

ஈரோடு, பிப்.22: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 72.45 அடியாக இருந்தது.

அணைக்கு 520 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 520 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணை நீர் இருப்பு 12.01 டி.எம்.சி.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## இலங்கை, ஆப்ரிக்காவிற்கு 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி

பிப்ரவரி 24,2012,02:01



புதுடில்லி:சென்ற அக்டோபர் முதல் இதுவரை, இந்தியாவிலிருந்து, 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கைக்கு அதிக அளவிலான சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டதாக, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உலகில் சர்க்கரை உற்பத்தியில், பிரேசிலுக்கு அடுத்த இடத்தில், இந்தியா உள்ளது. நடப்பு சந்தை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாகவும், தேவை 2.20 கோடி டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு, நடப்பு சர்க்கரை பருவத்தில், இரண்டு கட்டங்களாக, 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளது. இதில், முதற்கட்டமாக, இதுவரையில், 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்தி யாவிலிருந்து, ஆப்ரிக்கா, இலங்கை, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அதிகளவில் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

சென்ற 2010-11ம் ஆண்டின் சந்தை பருவத்தில், இந்தியாவிலிருந்து, 26 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 284 காசாக நிர்ணயம்**

பிப்ரவரி 24,2012,01:52



நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 284 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. இதில்,முட்டை விலையில் நான்கு காசுகள் உயர்த்தி, 284 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: சென்னை, 290 காசுகள், பெங்களூரு, 280 காசுகள், மைசூரு, 280 காசுகள், ஐதராபாத், 259 காசுகள், மும்பை, 289 காசுகள், விஜயவாடா, 260 காசுகள், கோல்கட்டா, 310 காசுகள், பார்வாலா, 288 காசுகள், டில்லி, 300 காசுகள். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் பண் ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 35 ரூபாயாக நிர்ண யிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழி விலை கிலோ, 46 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**12,250 டன் உரங்கள் கையிருப்புதட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2012,02:12 IST

ஈரோடு: மாவட்டத்தில் அடுத்த சாகுபடிக்கு உரங்கள் தட்டுப்பாட்டை போக்கும் வகையில், 12 ஆயிரத்து 250 டன் உரம் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் தேவைக்கு ஏற்ப வாங்கி கொள்ளலாம்.ஈரோடு மாவட்டத்தில், கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலம், நெல், கரும்பு, வாழை, மஞ்சள், நிலக்கடலை, காய்கறி உள்ளிட்ட பயிர்கள் மூன்று லட்சம் ஏக்கரில் பயிரிடப்படுகின்றன.சென்றாண்டு, உரங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அப்போது வேளாண் அமைச்சராக இருந்த செங்கோட்டையன், பல்வேறு ஏற்பாடுகள் செய்து, ஈரோட்டுக்கு உரங்களை இறக்குமதி செய்தார். இருந்தும் போதியளவில் உரங்கள் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் புகார் செய்தனர்.

மேலும், உரம் விலை இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டது. தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். வரும் ஆண்டில் உரங்கள் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் வகையில் தற்போதே போதியளவில் கையிருப்பு வைக்க வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:தற்போது, நெல் அறுவடை நடந்து வருகிறது.

அடுத்த சாகுபடிக்கு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரங்கள் கிடைக்க போதியளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஃபிப்., 15ம் தேதி நிலவரப்படி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் யூரியா (ஒரு மூட்டை விலை - 268 ரூபாய்) - 3,087 டன், டி.ஏ.பி., (910 ரூபாய்) - 2,200 டன், பொட்டாஷ் (565 ரூபாய்) - 415 டன், 20:20 காம்ப்ளக்ஸ் (740 ரூபாய்) - 1,015 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.தனியார் உரக்கடைகளில் யூரியா - 1,900 டன், டி.ஏ.பி., - 500 டன், பொட்டாஷ் - 250 டன், 20.20 காம்ப்ளக்ஸ் - 2,900 டன் என, மொத்தம் - 12 ஆயிரத்து 267 டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் உரங்களை பயன்படுத்தி கொள்ளலாம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2012,00:13 IST

கிருஷ்ணகிரி: கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை:
கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், அனைத்து துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

## உள்ளூர் நெல் வரத்து குறைந்தது

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,23:37 IST

கிராமப்புறங்களில், அறுவடை முடிந்துள்ளதால் சென்னைக்கு நெல் வரத்து குறைந்துள்ளது. நெல் விலை அதிகரித்துள்ளது. இதன் எதிரொலியாக அரிசி விலையும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிவாசிகளின் அரிசித் தேவையை பூர்த்தி செய்யும் அரிசி ஆலைகள், செங்குன்றம் பகுதியில் உள்ளன. இங்கு ஆந்திர கிராமங்களில் இருந்து நெல் கொண்டுவரப்படுகிறது.

அத்துடன், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டப்பகுதிகளில் இருந்தும் நெல் கொண்டுவரப்படுகிறது. "தை' பருவ அறுவடை காரணமாக, கடந்த ஒரு மாதமாக திருவள்ளூர் மாவட்டப்பகுதிகளில் இருந்து கணிசமாக நெல் வந்தது.

ஒரு நாளைக்கு, 80 முதல் 100 லாரிகளில் 2,000 "டன்' வரை நெல் சராசரியாக கொண்டுவரப்பட்டது. இது தவிர உள்ளூர் விவசாயிகள் டிராக்டர், "குட்டி யானை' எனப்படும் சரக்கு வாகனம் மற்றும் மாட்டு வண்டிக ளிலும் நெல் கொண்டு வந்தனர். இதனால், செங்குன்றம் அரிசி ஆலைகளில் உற்பத்தி அமோகமாக நடந்தது.

தற்போது மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் அறுவடை முடிந்துவிட்டது. ஒரு சில கிராமங்களில் இருந்தும் ஆந்திராவில் அறுவடை துவங்கி இருப்பதால், அங்கிருந்து தினமும் 50 முதல் 70 லாரிகளில் நெல் வருகிறது.

வரத்து குறைவு காரணமாக, நெல் விலை மூட்டைக்கு 50 ரூபாய் முதல் 100 வரை அதிரிகரித்துள்ளது. நெல் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, அரிசி விலையும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு நெல், அரிசி மொத்த வியாபாரிகள் சங்கங்களின் சம்மேளனத்தலைவர் துளசிங்கம் கூறியதாவது;

தமிழகத்தில் அரிசி உற்பத்தியில் பாதிப்பு இல்லை. அதனால் தட்டுப்பாடும் இல்லை. விலை உயர்வு என்பது தற்காலிகமானதுதான். கடந்த சில மாதங்களாக, அரிசி விலை சீராகவே உள்ளது.

மாவட்டப்பகுதிகளில் நெல் வரத்து குறைந்தாலும், ஆந்திர நெல் வரத்து நீடிக்கிறது. தற்போது சென்னையைத் தவிர, மற்ற மாவட்டப்பகுதிகளில் தொடரும் மின் வெட்டு பிரச்னையால், "நாற்று' விடவே விவசாயிகள் தயங்குகின்றனர். அரிசி ஆலை தொழிலாளர்கள் வேலைக்கு வருவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் அடுத்த பருவத்துக்கு தேவையான மின்சாரம் கிடைக்க வேண்டும். அப்போதுதான் உற்பத்தி சீராக இருக்கும். மின்தட்டுப்பாட்டைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க

வேண்டும்.
அப்போதுதான் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு, தடையற்ற தொழில் வளத்திற்கான நம்பிக்கை கிடைக்கும். நெல், அரிசி விலையும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

**நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் வசூல் வேட்டை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,23:01 IST

கருத்தை பதிவு செய்ய
பொங்கலூர் : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் மாவட்டம் முழுவதும் நடத்தப்படும் நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு நடந்து வருகிறது; விவசாயிகளிடம், பல்வேறு வழிகளில் "சுரண்டு'கின்றனர்.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், திருப்பூர் மாவட்டத்தில், மடத்துக்குளம், வேடப்பட்டி, முத்தூர் மார்க்கெட்டிங் கமிட்டி, மேட்டான்காட்டு வலசு, வெள்ளகோவில், நத்தக்காடையூர், புதுப்பை, பழையகோட்டை, பரஞ்சேர்வழி உள்ளிட்ட ஒன்பது இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.
நெல் வரத்துக்கு ஏற்ப, ஜன., முதல் ஜூலை வரை, கொள்முதல் செய்யப்படுகிறது.
இந்நிலையங்களில், நாளொன்றுக்கு 300 டன் வரை கொள்முதல் செய்யப்படும். இங்கு, ஒரு கிளார்க், ஒரு வாட்ச்மேன் உள்ளனர். தரப்பரிசோதனை செய்வதற்காக, "குவாலிட்டி கண்ட்ரோலர்' ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.
விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை 40 கிலோ கொண்ட மூட்டைகளாக பிரிக்கின்றனர். ஏற்று கூலி, இறக்கு கூலி, லாரி வாடகை உள்ளிட்டவைகளுக்கு என்று, விவசாயிகளிடம் இருந்து ஒரு மூட்டைக்கு 28 ரூபாய் வசூலிக்கின்றனர். இத்தொகைக்கு விவசாயிகளுக்கு பில் கொடுப்பதில்லை; அனைத்து அலுவலர்களும் பங்கு பிரித்துக் கொள்கின்றனர். இவ்வாறு, ஒன்பது நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடம் இருந்து, நாள்தோறும் பல ஆயிரம் ரூபாய் முறைகேடாக வசூலிக்கப்
படுகிறது.
ஒரு மூட்டைக்கு குறைவாக உள்ள நெல்லை எடை போடாமல், ஓரத்தில் பதுக்கி வைக்கின்றனர். மீதமாகும் நெல்லை அங்குள்ள ஊழியர்கள் பிரித்துக் கொள்கின்றனர். விவசாயிகள் டிராக்டர்களில் நெல் கொண்டு வந்து கொட்டிச் செல்கின்றனர்; மூட்டை கட்டும்போது, சில மூட்டைகளை குறைத்து கணக்கு காட்டி விடுகின்றனர். இவ்வாறு "லவட்டும்' நெல்லை, ஏதோ ஒரு விவசாயி பெயரில் பில் போட்டு பணம் எடுத்துக் கொள்கின்றனர்.
இந்த நிலையங்களில், விவசாயி

களிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால், மூட்டைக்கு 35 ரூபாய் கொடுத்து விட்டு, வியாபாரிகளும் நெல் விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகள் போர்வையில் வியாபாரிகளும் உள்ளே நுழைந்து விடுகின்றனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக திருப்பூர் மண்டல மேலாளர் வேணுகோபாலிடம் கேட்டபோது, ""இறக்கு கூலி, ஏற்று கூலி, பராமரிப்பு செலவுகளுக்காக அரசு சார்பில், குவிண்டாலுக்கு 49 ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. லாரி வாடகை கிலோ மீட்டர் கணக்கில் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. கம்ப்யூட்டர் சிட்டா, வி.ஏ.ஓ., சான்று இருந்தால் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. வியாபாரிகள் விற்பனை செய்ய வாய்ப்பில்லை," என்றார்.

**கரும்பு சாகுபடியில் நவீனமுறை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 23,2012,22:08 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் :தமிழகத்தில் கரும்பு சாகுபடியில் நவீன முறையில் சீர்மிகு கரும்பு சாகுபடி முறையை அறிமுகம் செய்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

தமிழகத்தில் கரும்பு கர்ணையை நட்டு விவசாயம் செய்யும் முறையைத்தான் இதுவரை செய்து வந்தனர். தற்போது புதிய முறையை விவசாய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் கடலோர உவர் ஆராய்ச்சி மைய பேராசிரியர் கணேசராஜா கூறியதாவது:

சீர்மிகு கரும்பு விவசாய சாகுபடி முறையில் கர்ணை மூலம் இல்லாமல், கரும்பு நாற்று எடுத்து குழிதட்டு நடவு மூலம் நாற்று வளர்த்து நடவு செய்யப்படும். முன்பு 80 செ.மீ., இடைவெளியில் நடவு செய்யப்பட்டது. புதிய முறையில் ஒன்றரை மீட்டர் இடைவெளியில் சொட்டுநீர் பாசனம் முறையில் விவசாயம் செய்யப்படும். குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைக்கும். இதுகுறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறோம், என்றார்.